**மஸ்கெலியா பிரதேச சபையின் 2022.11.14 சபையமர்வு அறிக்கை**

2022.11.14ஆம் திகதி காலை 09.30 மணியளவில் கௌரவ தவிசாளர் G.செண்பகவள்ளி அவர்களின் தலைமையில் சபையமர்வு ஆரம்பமானது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இன்றைய சபையமர்விற்கு வருகை தந்துள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்பதோடு கடவுள் வணக்கத்துடன் இன்றைய சபையமர்வானது ஆரம்பமாகும்.

காலஞ்சென்ற ……………….. அவர்களின் ஆத்மா சாந்தியடைய 01 நிமிட மௌன அஞ்சலியினை செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 1. கடந்தகால சபை அறிக்கையை சமா்ப்பித்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கடந்த மாத சபையமர்வு அறிக்கையினை சபை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கடந்த மாதம் எனது பிரேரணைகளுக்கு அமைவாக அனுப்பப்பட்ட கடிதங்களுக்கான பிரதிகளை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த சபையில் வீதி அபிவிருத்தி சபை தொடர்பாக விடயமொன்றை குறிப்பிட்டிருந்தேன், நல்லதண்ணி பிரதேசத்தில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இடத்தில் உள்ள கடைகள் சில உடைக்கப்பட்டுள்ளது. ஒரு சில கடைகள் உடைக்கப்படவில்லை, அவர்களுக்கே நிரந்தரமாக வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

10ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் உடைக்கப்படுவதில்லை என்று கூறியுள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

06 கடைகள் தற்போது முழுமையாக உடைக்கப்பட்டுள்ளது. ஒரு சில கடைகளுக்கு வாயப்பு வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக நான் தேடிப்பார்க்க சொல்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

தற்போது நல்லதண்ணி பிரதேசத்தில் மண்மேடுகளை அகற்றும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, இது உண்மையில் வரவேற்கத்தக்க விடயம். அத்துடன் கடந்த சபையில் கௌரவ உறுப்பினர் சுரேஸ்குமார் அவர்களும் குறிப்பிட்டிருந்தார், காபட் பாதைகளுக்கும் பாதுகாப்பு வேலி அமைப்பது தொடர்பான விடயத்தை குறிப்பிட்டிருந்தோம் எனவே அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இது தொடர்பாக புதன்கிழமை வருவதாக கூறியுள்ளனர்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

கடந்த மாத சபையமர்வு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

**தீர்மான இல 01**

2022.10.12ம் திகதி நடைபெற்ற சபையமர்வின் அறிக்கை சரியென சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## 2. கௌரவ தவிசாளர் அவர்களின் விசேட அறிவித்தல்

கடந்த 08ம் திகதி நடைபெற்ற சிவனொளிபாதமலை பருவக்கால ஆரம்பம் தொடர்பான விசேட கலந்துரையாடலில் பாதைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதென வீதி அபிவிருத்தி அறிவித்துள்ளோம், அடுத்த போயா தினத்திற்கு முன்னர் ஓரளவிற்கு பாதைகளை புனரமைப்பதாக கூறியுள்ளனர். அத்துடன் மஸ்கெலியா நகரிலுள்ள பாதைகளில் சேதம் ஏற்பட்டுள்ள இடங்களுக்கு தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றை புனரமைப்பதற்கான வேலைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

## 3. பிரதேச சபைக்கு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் முறைப்பாடுகளை சபைக்கு முன்வைத்தல்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக சபைக்கு கிடைக்கப்பெற்ற கடிதங்கள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கடித இல 01**

**அனுப்புனர்** - உள்ளூராட்சி துணை ஆணையாளர் காரியாலயம்.

**விடயம்** - 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கான சபையமர்வு அறிக்கை அவதானிப்பு கடிதம்.

**கடித இல 02**

**அனுப்புனர்** - பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை.

**விடயம்** - அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்தல் தொடர்பான கடிதம்.

**கடித இல 03**

**அனுப்புனர்** - வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு.

**விடயம்** - பொதுமக்கள் முகங்கொடுத்துள்ள விசப்பாம்பு, குரங்கு தொல்லை தொடர்பான கடிதம்.

**கடித இல 04**

**அனுப்புனர்** - சுகாதார, சுதேச வைத்திய, சமூக நலன்புரி, நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவை அமைச்சு.

**விடயம்** - வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பான கடிதம்.

**கடித இல 05**

**அனுப்புனர்** - மஸ்கெலியா பிரதான வீதி இரண்டாவது லொறி வாகன தரிப்பிட சாரதிமார்கள்.

**விடயம்** - மஸ்கெலியா பிரதான வீதி இரண்டாவது லொறி வாகன தரிப்பிட சாரதிமார்களின் முறைப்பாட்டு கடிதம்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த பிரச்சினை ஏற்பட்ட நாள் கௌரவ உறுப்பினர் ரவீந்திரராஜா அவர்களும் அங்கு சென்றிருந்தோம், இவ்விடயத்தை தவிசாளருக்கும் அறியத்தந்திருந்தேன், தவிசாளர் அவர்களும் இது தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவித்து தேடிப்பார்ப்பதாக கூறியிருந்தார். செயலாளருக்கும் அறிவித்து இது தொடர்பாக கேட்டிருந்தேன். குறித்த சாரதிகள் 20, 30 வருடங்களாக அந்த இடத்திலே வாகனங்களை தரித்து தமது நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதற்கான சான்றுகளும் அவர்களிடம் உள்ளது. தற்போது தனிப்பட்ட நபரின் வேண்டுகோளிற்கிணங்க இத்தரிப்பிடம் அகற்றப்பட வேண்டும் என்பது ஒரு அநியாயமான ஒரு விடயம். இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளோம், தவிசாளர் ஒருவர் உள்ளார், நகரத்திலுள்ள பாதைகள் பிரதேச சபைக்கு சொந்தமான பாதைகள். இப்படி இருக்கையில் தனிப்பட்ட ஒருவரின் அதிகாரத்தை பயன்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. நல்லதண்ணியிலும் இவ்வாறான ஒரு விடயமே நடைப்பெற்றது. குறித்த நபருக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் சபைக்கு சொந்தமான வேன் தரிப்பிடத்திலே மாலை 06 மணிக்கு மேல் பலவந்தமாக நிறுத்தப்படுகின்றது. அங்கு No Parking Board போடப்பட்ட இடத்தில் ஒரு நபர் அவரது வாகனங்களை தரித்து வைக்கின்றார். இவற்றை கண்டும் கண்டுக்கொள்ளாதபடி இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயம். எனவே இந்த மக்கள் பக்கம் நின்று அவர்களுக்கு நிரந்தர தீர்வை சபை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

குறித்த தரிப்பிடத்திற்கு முன்பதாக கௌரவ உறுப்பினர் திஜாநாயக்க அவர்களின் நிதியினூடாக ஒரு பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் அம்பகமுவ பிரதேச சபையின் வாகன தரிப்பிடம் என்று நமது பிரதேச சபை அதிகாரத்திற்கு கிடைத்த பின்னரும் கூட பெயர் பலகை வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகவும் சபையில் பேசப்பட்டிருந்தது. இந்த தரிப்பிடம் மஸ்கெலியா பிரதேச சபையின் கோவைப்படுத்தலுக்கு கீழே வருகின்றதா என்பது தான் கேள்வி. வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலே நீதி மன்றத்திலே மஸ்கெலியா பிரதேச சபையின் நிலைப்பாடு எவ்வாறு இருந்தது.

**கௌரவ தவிசாளரின் அனுமதியுடன் செயலாளர் அவர்களினால் கௌரவ உறுப்பினர் கே.சுரேஸ்குமார் அவர்களின் வினாவுக்கான தரவுகள் முன்வைக்கப்பட்டன.**

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

வளைவான இடத்தில் வாகனம் போடக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது என்று பொலிசாரினால் கூறப்பட்டது, வளைவுள்ள இடத்தில் வாகனங்களை நிறுத்தாமல் எஞ்சியுள்ள இடத்தில் வாகனங்களை நிறுத்தலாம். இல்லாவிட்டால் இன்னொருத்தருக்கு அவ்விடம் கையகப்படுத்தப்படும். போடக்கூடிய வாகனங்களை மட்டும் போட்டு விட்டு வளைவில் No Parking Board போடவேண்டும். நல்லதண்ணியில் போன்று அல்லாது இந்த தரிப்பிடத்தை இந்த சாரதிகளுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும். இவ்விடயத்திற்கு நாம் நடவடிக்கை எடுக்காவிட்டால் சபையிற்கு அவதூறு ஏற்படும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் பேசியதற்கிணங்க நாங்களும் பொலிசாருடன் இது தொடர்பாக கலந்துரையாடி இருந்தோம், வளைவில் வாகனங்களை தரிக்க கூடாது என்று தான் அவர்கள் கூறியிருந்தார்கள், குறித்த வாகனங்களை மாத்திரம் அங்கு நிறுத்தி விட்டு ஏனைய வாகனங்களுக்கு மாற்று இடங்களை பரிந்துரை செய்யவுள்ளோம். ஏனைய வாகனங்களை போடக்கூடாது என்றால் கடை உரிமையாளரின் வாகனங்களையும் தரிக்கக்கூடாது. பொலிஸில் உள்ள வாகன குழுவுடன் இணைந்து குறித்த தரிப்பிடங்களை அடையாளமிடவுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

முதலில் மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட வாகனத்தரிப்பிடங்கள் எத்தனை அதில் எத்தனை தரிப்பிடங்களை நாம் பதிவு செய்துள்ளோம் என்பதனை பார்க்க வேண்டும். இவற்றில் எவற்றை வர்த்தமானி செய்துள்ளோம் என்பதனையும் பார்க்க வேண்டும். வேன் தரிப்பிடத்திற்கு அண்மையிலுள்ள பாதை மறித்து அங்குள்ள ஒரு நபர் வாகன திருத்தும் வேலைகளை செய்துக்கொண்டிருக்கின்றார். எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியினை பயன்படுத்தி அங்குள்ள பாதைக்கான வேலி அமைக்கும் வேலைகளை செய்யவும்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட வீதிக்கு அங்கு வாகனம் நிறுத்த கூடாது என்று நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது, அவ்விடத்தில் வாகனம் நிறுத்த கூடாது நிறுத்த வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டிய பிரதேச சபை தான். நாம் இன்னும் அத்தரிப்பிடத்தை இன்னும் பதிவு செய்யவில்லை. இன்னும் தரிப்பிடத்தை வர்த்தமானி செய்யாதது நமது பிழை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக கேள்விப்பட்டவுடன் பொலிஸில் சென்று பேசினோம், அவர்களுக்கும் பிரச்சினை என்ற ஒன்று வந்ததன் பின்னர் தான் சபைக்கு வந்தனர். எங்களால் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

வளைவு என்று குறிப்பிடும் என்ற விடயம் ஒரு கண்துடைப்பு தான். 02 பக்கங்களும் மாற்றி மாற்றி தரித்தால் பிரச்சினை இருக்காது தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அப்பாதையில் 02 பக்கமும் தரித்து வைக்க முடியாது. இதற்காக தான் மாற்று நடவடிக்கைகள் தொடர்பாக தேடிக்கொண்டிருக்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

தனி நபர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அவர்ப்பக்கம் உள்ள நியாயத்தை கூறியதனால் அவர் சார்பாக நீதிமன்ற தீர்ப்பு கிடைத்துள்ளது. ஒட்டுமொத்த பிரதேச சபையும் மக்கள் சார்பிலுள்ள பிரச்சினையை நாம் முன்வைத்திருந்தால் நாமும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புள்ளது. அவ்விடயத்தில் நாம் தவறிவிட்டோம், எனவே அச்சாரதிகள் பாதிக்காமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவும்.

**கௌரவ உறுப்பினர் S.A.திஸாநாயக்க அவர்கள் (ஸ்ரீ.பொ.பெ)(45)**

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

தற்போது கௌரவ உறுப்பினர் திஸாநாயக்க அவர்கள் குறித்த தரிப்பிடத்தில் பற்றுசீட்டு உடைத்து இன்னும் பதிவு செய்யவில்லை, அன்றைய தினம் சபைக்கு சென்றிருந்த வேலையில் 10 வேன்களுக்கு பற்றுச்சீட்டு உடைத்து பதிவு செய்யப்பட்டு கோவைப்படுத்தப்பட்டிருந்தது. இவ்விடயத்தை நாங்கள் பிழை கூறிவில்லை, கௌரவ உறுப்பினர்களுக்கு இவ்வாறான விடயங்கள் தெரிய வேண்டும் என்பதனை தான் நான் கூறுகின்றேன். அன்று நாங்கள் கூறிய விடயம் இதே போன்று ஏனையவர்களையும் பதிவு செய்ய வேண்டும் என்பதனை தான், இவ்வாறான விடயங்கள் வெளியில் தெரிவதில்லை. இங்கு முரண்பாடுகள் ஏற்படுவதற்கு காரணமும் இவ்வாறான விடயங்கள் தான். நல்ல விடயங்களுக்கு நாங்கள் குறிக்கீடு செய்வதில்லை, எனவே இவ்வாறான நல்ல விடயங்களை செய்யும் போது கௌரவ உறுப்பினர்களையும் இணைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

இந்த சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து இவ்வாகன தரிப்பிடப்பிரச்சினை இருந்துக்கொண்டு தான் உள்ளது. மஸ்கெலியா நகரில் நான் 20 வருடங்களுக்கு மேல் வாகன சாரதியாக செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றேன். இந்த மஸ்கெலியா நகரத்தை முழுவதுமாக அழகுப்படுத்தி அதனை தூய்மைப்படுத்தும் பணிகளை எமது சபை செய்துக்கொண்டு இருக்கின்றது. எங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, எமக்கு வரி செலுத்தி அங்கு தொழில் செய்துக்கொண்டிருக்கும் சாரதிகளை வெளியேற்றி, ஒரு தனி நபரின் முயற்சியினால் அவர் வெற்றியளிக்கப்பட்டுள்ளார். இது மிகவும் பிழையான விடயம். அங்கு வளைவு ஒன்று உள்ளததனால் வாகனங்களுக்கு சிரமமாக உள்ளதென பொலிஸ் தரப்பினால் கூறப்படுகின்றது, 30 வருடங்களாக அந்த வாகனத்தரிப்பிடம் அங்கு தான் உள்ளது. ஒரு தனிநபருக்காக அங்கு தொழில் புரிபவர்களை அகற்ற முடியாது. மேலும் வேன் தரிப்பிடத்தில் பின் புறம் நடைபாதையினை அடையாளம் இட்டுள்ளோம், அதே போல இவ்விடத்திலும் அவ்வாறு அடையாளம் இட வேண்டும். அத்துடன் கடையிற்கு முன்னுள்ள நடைபாதையில் வேலி அமைக்க வேண்டும்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே, இதன் காரணமாக தான் பாதையை அடையாளமிட்டு, அதன் காரணமாக அந்த கடைக்காரர்கள் எல்லாம் வந்து புகார் அளித்து பொலிஸிற்கு சென்று பிரச்சினை ஆகியது. ஒரு சிலர் கடைக்கு முன்னால் No Parking Board வைத்துக்கொள்கின்றார்கள், நாம் திரும்பி சென்று அந்த பலகையை அகற்றுகின்றோம். இது தான் தொடர்ந்து நடைபெறுகின்றது. கடைகள் மறைகின்றது என்று கூறியதற்கமைவாக தான் அவ்வேலைத்திட்டத்தை நாம் செய்தோம். அதன் பின்னர் அங்குள்ள அனைத்து சாரதிகளும் சபைக்கு வந்தனர். அப்போது தான் முதலில் கட்ட வேண்டிய பணத்தை கட்டுங்கள் என்று கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் A.ரவீந்திரராஜா அவர்கள் (ஐ.தே.க)**

இதேபோன்று ஏனையவர்களும் வழக்கு தாக்கல் செய்தால் என்ன செய்வது? தனிப்பட்ட நபர் No Parking Board வைத்துள்ளார். நல்லதண்ணியிலும் இது போன்ற ஒரு செயற்பாடு தான் நடைபெற்றது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடயம் தொடர்பாக நாம் தனியாக கலந்துரையாடுவோம்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

இவ்விடயம் தொடர்பாக நீண்ட காலமாக கூறிவருகின்றோம், எனினும் இவ்வளவு காலத்திற்கு தவிசாளரின் அதிகாரத்தை பயன்படுத்தி ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் அவர்களே என்ன செய்யவில்லை என்று கூறுகின்றீர்கள்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

வேன் தரிப்பிடம் தொடர்பாக நான் சபையில் பேசியதன் பின்னர் தான் அங்கு பதிவுகளை மேற்கொண்டுள்ளீர்கள்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபைக்கு உரிய கட்டணத்தை செலுத்தாதவர்களுக்கு பல கடிதங்கள் மீண்டும் மீண்டும் அனுப்பியுள்ளோம். அங்குள்ள தரிப்பிட தலைவருக்கு நாம் கடிதம் அனுப்புகின்றோம், குறித்த நபர் இவ்வளவு காலமாக சபைக்கு பணம் செலுத்தவில்லை என்றும் அவர்களை பணம் செலுத்துமாறு கூறி நாம் கடிதம் அனுப்புகின்றோம். பின்னர் அவர்கள் சபையில் வந்து இவ்வளவு தொகையினை என்னால் கட்ட முடியவில்லை என்று கூறுகின்றனர். அவ்வாறு தாங்களால் கட்ட முடியா விட்டால் தாங்களது வாகன தரிப்பிடம் அகற்றப்படும் என்று கடிதம் அனுப்பவுள்ளேன். அதை தான் செய்யவுள்ளது. மக்கள் பக்கமும் நாங்கள் பார்க்க வேண்டும். அவர்களை அங்கிருந்து அனுப்பினால் இதே மக்கள் பிரதிநிதிகள் தான் வந்து அவர்கள் பக்கம் பேசுவார்கள்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

அவர்கள் பக்கம் நாம் பார்க்கவும் வேண்டும், ஆனால் இவ்வளவு நாள் விட்டதும் பிழை தானே?

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

விட்டது பிழை அல்ல, ஒவ்வொரு வருடமும் 02, 04 கடிதங்கள் அனுப்புகின்றோம். அதற்கான ஆதாரமும் உள்ளது. தொடர்ந்து யார் யார் பணம் செலுத்தாமல் இருக்கின்றார்களே அவர்களின் தரிப்பிட உரிமையை அகற்ற நடவடிக்கை எடுக்க போகின்றேன். அப்போதும் இதே கௌரவ உறுப்பினர்கள் தான் அவர்களுக்கு சார்பாக பேசப்போகின்றீர்கள்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

அவர்கள் கட்டவில்லை என்றால் அந்த நடவடிக்கைக்கு செல்லுங்கள். மேலும் இந்த லொறி தரிப்பிடத்தில் இதனையே தொழிலாக வைத்துள்ளவர்களை நீதிமன்ற கூறியதன் காரணமாக தீடீரென அவர்களை எடுங்கள் என்று கூற முடியாது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

நீதிமன்ற தீர்ப்பு சபைக்கு கிடைக்கப்பெற்றதும் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடுவோம்.

## 4. நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக நிதி மற்றும் ஏனைய குழு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்களினால் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் வழங்கப்பட்ட டென்டர் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

முதல் தடவை டென்டர் நிகழ்வின் போது நிறைய கடைகள் எடுக்கப்படவில்லை, மீள் டென்டர் அறிவித்த போதும் கடைகள் எடுக்கப்படவில்லை. டென்டரில் செல்லாத கடைகளை வந்து கேட்பவர்களுக்கு வழங்குவோம் என்று நிதிக்குழு தீர்மானமொன்றை எடுத்திருந்தது. 03வது மீள் டென்டர் போடுவதற்கான கால அவகாசம் இருக்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் K.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்களினால் 2023ம் ஆண்டுக்கான மாட்டிறைச்சி கடை டென்டர் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள் (ஐ.ம.சு.மு)**

நிதிக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளல் தொடர்பான விடயம் தொடர்பாக கௌரவ உறுப்பினரால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

கௌரவ உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் அவர்களினால் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் வழங்கப்பட்ட டென்டர் தொடர்பாகவும் நிதிக்குழு அங்கத்துவம் தொடர்பாகவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

சபையென்றால் அனைவரும் ஒற்றுமையாக தான் இருக்க வேண்டும், என்னால் இருக்க முடியாது என்னால் இருக்க முடியாது என்றால் அப்போது யார் தான் குழுக்களில் அங்கத்துவம் வகிப்பது,

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் எஸ்.சுப்பிரமணியம் அவர்களினால் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு மஸ்கெலியா பொது விளையாட்டு மைதானத்தில் வழங்கப்பட்ட டென்டர் தொடர்பாக கருத்து தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழுவில் புதிய உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளல் தொடர்பாக கௌரவ உப தவிசாளர் அவர்களால் முன்மொழிவு முன்வைக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

டென்டர் விதிமுறைகள் தொடர்பாக கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தன் அவர்களினால் கருத்து தெரிவிக்கப்பட்டது.

**தீர்மான இல 02**

கௌரவ உப தவிசாளர் பி.பி.பிரதீபன் அவர்கள், கௌரவ உறுப்பினர் கே.ராஜ்குமார் அவர்கள், கௌரவ உறுப்பினர் பி.ஆனந்தன் அவர்களை அடுத்தமாதத்தில் நிதிக்குழு உறுப்பினர்களாக இணைத்துக்கொள்ள சபை அனுமதி வழங்கியது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

கௌரவ உறுப்பினர் பி.ராஜ்குமார் அவர்களினால் மஸ்கெலியா பொது விளையாட்டு மைதான பதிவுகள் தொடர்பாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் T.வசந்தகுமார் அவர்கள் (இ.தொ.கா)**

நிதிக்குழு அறிக்கை சரியென நான் முன்மொழிகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தராஜ் அவர்கள் (இ.தொ.கா)**

அதனை நான் வழிமொழிகின்றேன்.

## 5. 2023ம் ஆண்டுக்கான பாதீட்டறிக்கையினை சபைக்கு முன்வைத்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

**கௌரவ உறுப்பினர் P.ஆனந்தன் அவர்கள் (ஐ.தே.க)**

இச்சபை ஆரம்பித்து 05வது பாதீட்டறிக்கை சமர்ப்பித்துள்ள வேளையிலே உரையாற்றுவதனை கொண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.இவ்வேளையிலே என்னை இச்சபைக்கு தெரிவு செய்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, மேலும் எங்களை தெரிவு செய்து தேர்தலில் ஈடுப்படுத்திய கட்சியின் தலைவர்கள் மேலும் கட்சியின் உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டு இப்பாதீடு தொடர்பாக கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று நினைக்கின்றேன். எமது பிரதேச சபையானது உண்மையில் பெரிய வருமானம் இல்லாத சபையாக இருந்தாலும் கூட மிகவும் இக்கட்டான நிலையிலே இச்சபை மிகவும் நேர்த்தியாக நடந்துள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்வதோடு, பிரதேச சபைகளின் கட்டளை சட்டத்தில் 1987ம் 15ம் சட்டத்தின் 33ம் பிரிவு திருத்தப்பட்டாலும் கூட அது முழுமைப்பெறவில்லை. அவ்வாறு முழுமை பெற்றால் எங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நிறைய வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கலாம். இதற்காக சபையிற்கு குற்றஞ்சாட்டவில்லை. சட்டத்திலுள்ள பிரச்சினைகள் மக்களுக்கு வேலை செய்ய இடையூறாக இருந்தது என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். மேலும் இப்பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைகளை திருத்தி அவற்றை பிரதேச சபைக்கு கீழ் கொண்டு வர நினைத்திருந்தோம், அத்திட்டத்தை அமுல்ப்படுத்த முடியவில்லை. மேலும் தோட்டங்கள் அனைத்திலும் வாசிகசாலைகளை நிறுவ முற்பட்டோம் அதனையும் செய்ய முடியாமல் போனது. மேலும் தோட்டப்புறங்களில் ஆயுர்வேத வைத்தியசாலை சேவைகளை கொண்டு செல்ல வேண்டும் அல்லது நடமாடும் ஆயுர்வேத சேவையினையாவது பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன், அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்தவகையிலே சபையில் செய்த பல நல்ல விடயங்களையும் நாம் மறந்துவிட முடியாது. மேலும் குறைந்த நிதியினை கொண்டு ஏனைய சபைகளை விட அதிகளவாக வேலைகளை செய்துள்ளோம். வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன, அந்த வகையிலே கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் சபையினருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் எமக்கு கிடைத்த சிறு சிறு நிதிகளினூடாக மக்களுக்கு சிறு சிறு பாதைகள் என்பவற்றை அமைத்துக்கொடுத்துள்ளோம். அத்துடன் சபையுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை செய்துள்ளோம். அத்துடன் நிதி இல்லாமல் செய்யக்கூடிய வேலைத்திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளோம். மேலும் கொவிட் காலத்தில் தொற்றுநீக்கலாக இருக்கலாம் அது போன்று குறித்த வேலையில் அனைவரும் களத்தில் இருந்து மேற்கொண்ட விடயங்கள் எதனையும் மறக்க முடியாது. அத்துடன் கடந்த வரவு செலவு திட்டத்தில் சுயத்தொழில் தொடர்பான விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது அது இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்பட்டமை மிகவும் வரவேற்கத்தக்க விடயம். 2022ம் ஆண்டு ஆரம்பித்திலே அரசாங்கம் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் 40 இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கி வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருந்தது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக அவ்வேலைத்திட்டத்தை தொடந்து முன்னெடுக்க முடியாமல் போனது. முடியுமான வேலைகளை செய்துள்ளோம், இதற்காக அரசாங்கத்திற்கும் சபையின் தவிசாளர் அவர்களுக்கும் செயலாளர் அவர்களுக்கும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, இவ்வருட வரவு செலவு திட்டம் சகல தரப்பினரின் அபிப்பிராயத்துடன் செய்யப்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்ள கூடியாதாக உள்ளது. அத்துடன் ஒவ்வொரு நிறுவனங்கள் ஊடாக இது தொடர்பாக பயிற்சிகள் அளிக்கப்பட்டது, செயலமர்வுகள் நடத்தப்பட்டன. மேலும் சபையில் எடுக்கும் தீர்மானங்களை உடனுக்குடன் நிறைவேற்றுவீர்களேயானால் மேலும் சிறப்பாக இருக்குமென கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் P.P.பிரதீபன் அவர்கள் (இ.தொ.கா)**

2023ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் சபையின் அனுமதிக்காக கௌரவ தவிசாளர் அவர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது. எமது சபையில் செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை ஏனைய சபைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் அதிக விடயங்களை நாம் மேற்கொண்டுள்ளோம். இது தொடர்பாக கௌரவ உறுப்பினர் ஆனந்தன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். மேலும் இரண்டரை வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக நாடு கட்டங்கட்டமாக முடக்கப்பட்டிருந்தது, அச்சந்தர்ப்பத்தில் கூட மஸ்கெலியா பிரதேச சபையின் செயற்பாடு மிகவும் நேர்த்தியாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் ஒதுக்கப்படும் நிதிகளினூடாகவும் செய்யப்படும் வேலைத்திட்டங்கள் நேர்த்தியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. எமக்கு சிறந்த தவிசாளர் ஒருவரும் செயலாளர் ஒருவரும் கிடைத்துள்ளனர். மேலும் சபையினை நேர்த்தியாக கொண்டு நடத்த நல்ல கௌரவ உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர். ஒருசில விடயங்களில் வாக்குவாதங்கள் ஏற்பட்டிருந்தாலும் கூட நல்ல விடயங்களை ஆதரிப்பத்தில். அவர்கள் தயங்கியதில்லை. இதன் காரணமாக தான் இலங்கை முழுவதில் உள்ள பெண் தவிசாளர்களில் ஒரு பேசும் பொருளாக எமது தவிசாளர் அவர்கள் உள்ளார். நாம் அனைவரும் எவ்வித பேதமும் இன்றி ஒற்றுமையாக செயற்பட்டுள்ளமையினை காணக்கூடியதாக உள்ளது. இவ்வரவு செலவுத்திட்டத்தை நான் ஆதரிக்கும் அதே வேளை இங்குள்ள ஏனைய உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு வழங்கி மஸ்கெலியா பிரதேச சபைக்கு ஆதரவாக செயற்பட வேண்டும் என்று கூறிக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுரேஸ்குமார் அவர்கள் (இ.தொ.கா)**

இவ்விடத்திற்கு நான் பொருத்தமானவன் என்று மறே 320H கிராமசேவகர் பிரிவிற்கு தெரிவு செய்யப்பட்ட மக்களின் பிரதிநிதியாகவும் நான் தெரிவு செய்வதற்கு பொருத்தமானவன் என்று, எனது பெயரை முன்மொழியப்பட்டதன் பின்னர் தாங்களே இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்த எங்களது மறைந்த தலைவர் அமமர் ஆறுமுகன் தொண்டமான் ஐயா அவர்களுக்கும் தற்போது தலைவராக இருக்கின்ற செந்தில் தொண்டமான் அவர்களுக்கும், பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கும், தவிசாளர் இராமேஸ்வரன் அவர்களுக்கும் அவர்களுடன் உட்பட்ட அனைவருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன், மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகவே என்னை இங்கு அனுப்பி வைத்துள்ளனர். அதனடிப்படையில் சபையில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக நிதி பற்றாக்குறை அதிகமாக இருந்தாலும் நிதியினை மாத்திரம் பயன்படுத்தி அல்லாமல் பல்வேறுப்பட்ட சேவைகள் சபையினூடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் நேர் விடயங்கள் அதிகமாகவும் மறை விடயங்கள் சிலவும் காணப்பட்டுள்ளது. மறைந்த அமைச்சர் தொண்டமான் அவர்களினால் வழங்கப்பட்ட நிதியினூடாகவும், முன்னால் அமைச்சர் கௌரவ ஜீவன் தொண்டமான் அவர்களினூடாக வழங்கப்பட்ட நிதியினூடாகவும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ராமேஸ்வரன் அவர்களின் நிதியினூடாகவும் மறே வட்டாரத்தை பொருத்த வரையில் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். அது மட்டுமன்றி 2022ம் ஆண்டு நடைபெற்ற பாதீட்டறிக்கையில் முன்வைக்கப்பட்ட நிதியினையும் வழங்கியிருந்தால் நன்மையாக அமைந்திருக்கும். அதற்கான ஏற்பாட்டையும் தவிசாளர் அவர்கள் செய்துக்கொடுத்தால் நன்மையாக இருக்கும். மேலும் சபை ஆரம்பித்த காலத்தில் இருந்து உறுப்பினர்கள் சபையில் உரையாற்றுவதற்கான Stand mic இனை கேட்டிருந்தோம் அதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அது குறையாகவே உள்ளது. உறுப்பினர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டிய அடையாள அட்டையினை கூட இன்னும் பெற்றுக்கொடுக்கவில்லை. அடுத்தாக துணை நகரங்களை பிரதான நகரமாக்கி அதற்கான துணை விதி சட்டங்களை தயாரிக்குமாறு தவிசாளர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன். நல்லதண்ணி, லக்கம் நகரங்களையும் உள்ளடக்கினால் நன்மையாக அமையும். ஏனைய பாதீட்டறிக்கைகளை விட இம்முறை பாதீட்டறிகை மக்களின் கருத்துக்களையும் சமூக ஆர்வலர்களின் கருத்துக்களையும் பெற்று வேறு விதத்தில் சற்று வித்தியாசமாக தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் சில நிறுவனங்களினூடாக உத்தியோகத்தர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட்ட பயிற்சியின் மூலம் பாதீட்டறிக்கை தயாரிப்பட்டுள்ளது.

**கௌரவ உறுப்பினர் P.ராஜ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இந்த கௌரவ சபைக்கு என்னை அனுப்பியமைக்கான தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைத்துவம் எங்களுடைய தலைவர் திகாம்பரம் அவர்களுக்கும், எனக்கு இவ்வாய்ப்பை வழங்கிய 320N பிரவுன்லோ மக்களுக்கு விசேட நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். இவ்வரவு செலவு திட்டம் மிகவும் நேர்த்தியான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய விடயங்களை இணைத்து இது தயாரிக்கப்பட்டிருந்தாலும் கூட, இச்சபை 04 வருடம் சிறப்பான சேவையினை செய்திருந்தாலும் கூட 1987ம் ஆண்டு இல 15 33ம் திருத்தின் கீழ் தோட்டப்புறங்களுக்கு சபைகள் வேலை செய்யலாம் என்ற பதத்தின் கீழ் முன்மொழிவுகள் இடம் பெற்றிருந்தாலும் கூட கடந்த காலங்களில் தோட்டப்புறங்களுக்கு நாம் வேலை செய்துள்ளோமா என பார்க்கும் போது, கௌரவ தவிசாளரின் உரையிலே இருந்தது 01 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது. இன்னுமே இந்த 01இலட்சம் ரூபா வழங்கப்படவில்லை. அந்த அடிப்படையிலே அனர்த்தம் சம்பந்தமாக நிறைய இடங்களுக்கு உதவி செய்ய முன்வைத்திருந்தோம், ஆனால் அதில் எத்தனை பேர் பயனடைந்துள்ளர். டெங்கு ஒழிப்பு தொடர்பாக எத்தனை தோட்டப்புறங்களில் வேலை செய்துள்ளோம், அதுவும் குறைவாகவே உள்ளது. மலசலகூட புனரமைப்பு, வடிகாண் சுத்திகரிப்பு போன்ற விடயங்கள் நகர்புறத்தை மையப்படுத்தி தான் உள்ளதே தவிர தோட்டப்புறங்களுக்கு செய்யப்படவில்லை. பிரதேச சபை நிதியினூடாக எந்த பாதை புனரமைப்பும் செய்யப்படவில்லை. தோட்டப்புறங்களுக்கு வேலை செய்வதற்கு நிதி பற்றாக்குறை காணப்பட்டாலும் நிதி இல்லாமல் செய்யக்கூடிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக நாங்கள் கூறியிருந்தோம். நிறைய தீர்மானங்களை கடிதங்கள் மூலம் தான் நிறைவேற்றியுள்ளோம், இதற்காக காரணம் நிதி பற்றாக்குறை இதற்கான நான் தலைமைத்துவத்தை பிழை கூறவில்லை. இதற்கு நாட்டிள்ள பொருளாதார பிரச்சினையும் காரணம். நான் இந்த பாதீட்டுக்கு எதிராக பேசுகின்றேன் என்றால் தவிசாளருக்கு எதிராகவே செயலாளருக்கு எதிராகவோ பேசவில்லை. என்று தோட்டப்புறங்களுக்கு என்று முழுமையாக வேலை செய்வதற்கு முடிகின்றதோ அன்று தான் இந்த பாதீட்டறிக்கையின் முழு வடிவத்தை பார்க்க முடியும். இப்போது தான் அப்பிரதேச சபைகள் பிரிக்கப்பட்டமைக்கான பயனை மக்கள் அடைவார்கள். அரசாங்கம் பாதீட்டறிக்கை வழங்கும் போது பிரதேச சபைகளுக்கென தனியாக ஒரு தொகையினை ஒதுக்கும் போது எமக்கு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது இலகுவாக இருக்கும். பிரதேச சபை உறுப்பினர்களுக்கு ஒரு நிதிக்கட்டமைப்பை உருவாக்க வேண்டும். தற்போது மலையக மக்களுக்காக அனைத்து கட்சியினரும் மக்களுக்கான ஒன்றிணைந்துள்ளனர். இதற்கான கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் அவர்களுக்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அது போல நாமும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். லக்கம் பிரதேசத்திற்கான துணை விதி சட்டத்தை உருவாக்கி அதனையும் பிரதேச சபையின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதனை தெரிவித்துக்கொள்வதுடன், பிரவுன்லோ நோட்டன் வீதியிலுள்ள கடைகள் அனைத்தையும் ஏதாவது ஒரு வகையில் பிரதேச சபையின் கீழ் கொண்டுவர வழிவகை செய்ய வேண்டும்.

வருங்காலத்தில் தோட்டப்புறங்களுக்கான அனைத்து விடயங்களையும் உள்ளடக்க வேண்டும். அப்போது தான் இப்புத்தகத்திற்கு ஒரு மதிப்பு இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் K.நித்தியானந்தன் அவர்கள் (இ.தொ.கா)**

2023ம் ஆண்டு பாதீட்டறிக்கை தயாரிப்பதற்கான பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்து பலருடன் கலந்துரையாடி பல சிறப்பம்சங்களை இணைத்து இப்பாதீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. 2018ம் ஆண்டு பெப்ரவரி 10ம் திகதி இச்சபைக்கு மக்கள் பிரதிநிதியாக வந்து 2023ம் ஆண்டு பாதீட்டு அறிக்கை சமர்ப்பித்திருக்கும் வேலையில் உரையினை ஆற்றுவதனை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதற்காக மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். தற்போது எனது கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான், பொது செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் ராமேஸ்வரன் உட்பட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏனைய உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் நிதியிலும் சரி, நிதி செயலாளரின் நிதியிலும் சரி, கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இராமேஸ்வரன் அவர்களின் நிதியிலும் சரி, கௌரவ தவிசாளர் அவர்களின் நிதியிலும் சரி எனது வட்டார்த்திற்கு பாரிய சேவைகளை செய்துள்ளேன். தோட்டப்புறங்களுக்கு கொங்கீரீட் பாதைகள் மதில்கள் என்பவற்றை செய்துக்கொடுத்துள்ளேன், அண்மையில் கூட தையல் இயந்திரங்களை பெற்றுக்கொடுத்துள்ளேன். இதற்கெல்லாம் காரணம் அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஐயா அவர்கள் தான். 2023ம் ஆண்டு பாதீட்டு அறிக்கை நேர்த்தியாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது, இதிலுள்ள விடயங்களை மஸ்கெலியா பிரதேச சபை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் K.யோகேந்திரன் அவர்கள் (ஐ.ம.சு.மு)**

2023ம் ஆண்டு பாதீட்டு அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கபட்டிருக்கும் இவ்வேலையில் என்னை இங்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்த எனது வட்டார மக்களுக்கும் இளைஞர் யுவதிகளுக்கும், ஏனைய தொகுதி மக்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். 2023ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தை தயாரித்த தவிசாளர், செயலாளர், காரியாலய உத்தியோகத்தர்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த காலங்களில் வருமானத்தை திரட்ட நாங்கள் முன்வைத்திருந்த பிரேரணைகளையும் சபை நடைமுறைப்படுத்தியிருந்தால் வரவு செலவு திட்டத்தில் வருமானம் அதிகரித்திருக்கும். மவுசாக்கலை பிரதேசத்தில் உள்ள இராவணா கல், காட்மோர் நீர்வீழ்ச்சி, படகு சேவை என்பவற்றை நாம் ஆரம்பித்து அவற்றை சுற்றுலா தளமாக்குவதற்கான வேலைத்திட்டங்களை செய்திருக்கலாம். மேலும் சபை ஆரம்பித்து 04 வருடங்கள் நிறைவுற்றும் சபையின் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை சபையினால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. எதிர்வரும் காலத்திலாவது நிரந்தர நியமனத்தை பெற்றுக்கொடுக்கவும். மேலும் தோட்டப்புறங்களில் வாசிகசாலைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டிருந்தோம். நடமாடும் வாசிகசாலை விடயத்தை மேற்கொண்டமைக்கு சபைக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். மஸ்கெலியாவிலுள்ள நூலகம் தற்போது நன்கு விருத்தி செய்யப்பட்டுள்ளது, இதற்காக கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல ஆயர்வேத வைத்தியசாலையினையும் விருத்தி செய்ய வேண்டும். எதிர்காலத்தில் உள்ளுராட்சி நிறுவனங்களின் சேவைகள் தோட்டப்புறங்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும். சிறிய சபையமாக இருந்தாலும் முடிந்தளவான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம், இதற்காக அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் S.சுப்பிரமணியம் அவர்கள் (ஐ.தே.க)**

நான் பிறந்து வளந்த ஊரிற்கு எனக்கு வாக்களித்த மக்களுக்கும், என்னை இந்த சபைக்கு உறுப்பிராக தேர்வு செய்து அனுப்பிய கட்சியின் தலைமைத்துவத்திற்கும் நன்றிகளை கூறிக்கொண்டு, இப்பாதீட்டு அறிக்கையிலே விசேடமான விடயங்களை நான் காணவில்லை, ஏனென்றால் நாங்கள் கூறிய விடயங்களை மிகவும் தாமதமாகவே நடைமுறைப்படுத்துவதனையே கடந்த காலங்களில் காணக்கூடியதாக உள்ளது. கடந்த சபையில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நிதி இவ்வருடத்தில் இன்னமும் வழங்கப்படவில்லை. இதன் மூலம் மக்களுக்கு சேவையினை பெற்றுக்கொடுக்க முடியாத நிலை உள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தினூடாக புதிய கிராமங்கள் அமைக்கப்பட்டன. அந்த கிராமங்களை சரி பிரதேச சபை உள்வாங்கி அங்குள்ள வேலைத்திட்டங்ள மேற்கொண்டால் பிரதேச சபை நிதியினை பயன்படுத்துவதற்கு நேரடியான வாய்ப்பை வழங்கும், இவற்றை பல சபைகளில் கூறியுள்ளோம். தோட்டங்களுக்கு வேலை செய்வதற்கான சட்டங்கள் திருத்தப்பட்டாலும் கூட அந்த பாதையில் பயணிக்க நாம் பின் நிற்கின்றோம். இதனால் மக்களுக்கு சேவையினை பெற்றுக்கொடுக்க முடியாமல் உள்ளோம். கிராமங்களை வரி அறவிடும் பிரதேசங்களாக அறிவித்து அக்கிரமங்களுக்கான வேலைத்திட்டங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். 15ம் இலக்க உள்ளுரட்சி சபைகள் சட்டம் காலாவதியாகிவிட்டது, அதில் எவ்வித அபிவிருத்தியும் கிடைக்கப்பெறாது, சபைகளை கலைப்பதற்கான நேரமும் தற்போது வந்துள்ளது. தற்போது எமது ஜனாதிபதி எல்லை நிர்ணய சபை ஒன்றை நிறுவியுள்ளார். தோட்டங்களுக்கான எல்லை நிர்ணயம் செய்யும் போது அத்தோட்டங்களிலே உள்ள புதிய கிராமங்களுக்கு பிரதேச சபையினூடாக நிதியினை கொண்டு செல்ல

முடியும். 04குழுக்களுக்கான நிதியினை மாத்திரமாவது மத்தியரசு வழங்க முன்வர வேண்டும். அப்போது தான் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். இச்சட்டங்களுக்கு மத்தியில் இப்பாதீட்டு அறிக்கை செலவுகளை அனுமதிப்பதற்கான வடிவமாக மாத்திரமே பார்க்க முடியும். இருந்தாலும் இம்முறை மக்கள் அமைப்புக்களுடன் தொடர்புகளை மேற்கொண்டு அவர்களின் ஆலோசனைகளை பெற்று அவ்விடயங்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது, எனினும் இது அனைத்தையும் மேற்கொள்ள கூடிய நிதி ஒத்துழைப்போ ஏனைய ஒத்துழைப்போ இருக்காது என்பது எனது கருத்து. இதன் முழுமையான ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் சட்டங்கள் மாற்றப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் K.சுரேஸ்குமார் அவர்கள் (ஐ.தே.க)**

இங்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பமளித்த எனது வட்டார மக்களுக்கும் அதுபோல என்னை உறுப்பினராக தெரிவு செய்த முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மயில்வாகனம் திலகராஜ் உட்பட தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொண்டு, 2023ம் ஆண்டுக்கான பாதீட்டறிக்கை ஒரு புதிய பாதீட்டறிக்கையாக உள்ளது. அரச சார்பற்ற நிறுவனமொன்றின் ஆலோசனைகள் வழிகாட்டுதலின் கீழ் மிகவும் நேர்த்தியாக தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வரவு செலவு திட்டத்தில் பிரதேச சபை சட்டவிதிகள் என்ன விடயத்தை கொண்டுள்ளதோ அதற்கேற்ப சந்திக்கின்ற ஒரு 9வது 10வது வரவு செலவு திட்டமாக பார்த்து வந்துள்ளேன். அவ்வரவு செலவு திட்டத்தில் ஒரு புதிய மாற்றம் ஒரு அரச சார்பற்ற நிறுவனம் பாதீட்டை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என்று ஒரு வழிகாட்டுதலை செய்து அதற்கமைய உறுப்பினர்கள் உத்தியோகத்தர்களை வழிகாட்டி இவ்வரவு செலவு திட்டத்தை தயாரித்தமையினையொட்டி இச்சபையின் தலைவர், செயலாளர், டிரான்பெரன்ஸ்ஸி இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா நிறுவனத்திற்கும் என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். உள்ளூராட்சி நிறுவனங்களில் வரவு செலவு திட்டத்தை தயாரிக்கும் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் தாம் சார்ந்திருந்த கட்சி தலைவர்களோ, மக்கள் பிரதிநிதிகளோ, முன்வந்திருக்காத நிலை காணப்பட்டது, அவர்கள் இது சார்ந்த பார்வையை அது சார்ந்த தவிசாளரிடமோ நிர்வாகத்திற்கு பொறுப்பான செயலாளரிடம் விட்டு அவர்களை நாங்கள் வாழ்த்து கூறுகின்ற விடயமாகவும் அவர்களின் அரசியல் இருப்பை தக்கவைத்துக்கொள்வதில் எமது தலைவர்கள் இதனை ஒரு படிக்கட்டாக பயன்படுத்தியுள்ளனர். மக்களுக்கு குறித்த வேலைத்திட்டங்களை செய்யுங்கள் என்று கூறும் அளவிற்கு அவர்கள் இருக்கவில்லை. பிரதேச சபைகள் சட்டம் திருத்தியமைக்கப்பட்டு பெருந்தோட்ட மக்களும் உள்ளூராட்சி நிறுவாக பொறிமுறைக்குள் உள்வாங்குகின்ற சந்தர்ப்பம் ஏற்படுகின்றதோ அன்று தான் மக்கள் பிரதிநிதிகளாக உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் முதல் எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் வரை அனைவரும் மகிழ்ச்சியடைய கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆனால் 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்திலே 33வது சரத்து கொண்டிருந்த அந்த விடயம் குறிப்பாக தோட்டங்களிலே அபிவிருத்திகளை மேற்கொள்கின்ற போது.

## 6. பிரேரணைகள்

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

அடுத்ததாக கௌரவ உறுப்பினர் அவர்களின் பிரேரணையினை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

## 07. ஏனைய விடயங்கள், விசேட அறிவித்தல்கள் மற்றும் எதிர்வரும் சபைக்கான திகதியை அறிவித்தல்.

**கௌரவ தலைவர் G.செண்பகவள்ளி அவர்கள் (இ.தொ.கா)**

இச்சபையினை அமைதியாக நடாத்திச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியமைக்கு நன்றி. இத்துடன் இச்சபை இனிதே நிறைவுறுகின்றது.

நன்றி வணக்கம்.

**G.செண்பகவள்ளி,**
**கௌரவ தவிசாளர் அவர்கள்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**

**S..ராஜவீரன்,**
**செயலாளர்,**
**மஸ்கெலியா பிரதேச சபை,**
**மஸ்கெலியா.**